செ.வெ.எண்: 54/ஜூன் நாள்: 21.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## பரமக்குடி வட்டத்திற்குட்பட்ட வருவாய் கிராமங்களுக்கான 4-ஆம் நாள் 1425-ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாயக் கணக்கு தணிக்கை முகாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று (21.06.2016) பரமக்குடி வட்டத்திற்குட்பட்ட கிராமங்களுக்கான 4-ஆம் நாள் 1425-ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாய கணக்கு தணிக்கை முகாமில் வருவாய் தீர்வாய அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த தணிக்கை முகாமில் பொதுமக்களிடமிருந்து மொத்தம் 147 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இம்மனுக்களில் தகுதியான மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணப்பட்டுள்ளது.

பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் 1425-ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாய கணக்கு தணிக்கை முகாம், வருவாய் தீர்வாய அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நேற்று (21.06.2016) துவங்கியது. இம்முகாமானது 15.06.2016 முதல் 17.06.2016 வரையிலும் மற்றும் 21.06.2016 முதல் 24.06.2016 வரை (7 நாட்கள்) நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இன்றைய தினம் நடைபெற்ற 4-ஆம் நாள் முகாமில் பரமக்குடி வட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் உள்ள பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு மொத்தம் 147 மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் வழங்கினார்கள். இவற்றில் 24 பயனாளிகளின் வீட்டுமனை பட்டா கோரிக்கையும் , 5 பயனாளிகளின் பட்டா மாறுதல் கோரிக்கை மனுவும், 2 பயனாளிகள் கோரிக்கை விடுத்த முதியோர் உதவித்தொகை, 2 பயனாளிகளின் விபத்து நிவாரணத் தொகை கோரிக்கை மனுவும், 1 பயனாளியின் திருமண உதவித்தொகை குறித்து கொடுத்த கோரிக்கை மனுவும், 3 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டை வழங்க கோரிய மனு ஆக மொத்தம் 37 மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணப்பட்டுள்ளது. மீதமுள்ள மனுக்கள் மேல்நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கப்பட்டு உடனடி தீர்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இம்முகாமில் பரமக்குடி வட்டாட்சியர் திரு.செய்யது முகமது, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.டி.மீனாட்சி சுந்தரம், மண்டல துணை வட்டாட்சியர்கள் திரு.மீனாட்சி, திருமதி.வசுமதி, துணை வட்டாட்சியர் (தேர்தல்) திரு.சேகர், வட்ட வழங்கல் அலுவலர் திரு.சுவாமிநாதன் உட்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**